Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நாச்சிமுத்து |
| Father's Name | – | சின்னான் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 16th April 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குஞ்சிபாளையத்தில் செந்தில் கவுண்டர் தோட்டத்தில் குடியிருந்து கொண்டு விவசாயக் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.08.2023 ம் தேதி நான் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது இரவு 1 மணியிருக்கும். வள்ளியம்மாள் என்பவர் திருடன், திருடன் என்று சத்தம் போடுவதைக் கேட்டேன். நான் என்ன ஏது என்றுவெளியே வந்து பார்த்தபோது சத்தத்தைக் கேட்டு 20 நபர்கள் கூடிவிட்டார்கள். மேற்படி வள்ளியம்மாள் இந்த தடத்தில்தான் சென்றார்கள். கிணற்றில் விழுந்த சத்தம் கேட்டது, நீ சென்று பார் என்று சொன்னார். நான் சென்று பார்த்தபோது ஒரு நபர் மேலே ஏறிவந்தவரை அங்கிருந்தோர் பிடித்துவிட்டனர்.

வள்ளியம்மாள் 2 நபர்கள் என்று சொன்னதால் மீண்டும் கிணற்றில் டார்ச் அடித்து பார்த்தபோது அங்கே மற்றொரு நபரும் இருந்தார். அவர் காப்பாற்றுங்கள் என்று கூறினார். நான் உடனடியாக என் முதலாளிக்கு தகவல் கொடுத்தேன். பின்னர் தீ அணைப்பு படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொது மக்கள் அதிகமாக கூடிவிட்டார்கள். மற்றொரு நபரை தீ அணைப்பு படை வீரர்கள் மீட்டனர். பொது மக்கள் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவேண்டும் என்று தெரிவித்தனர். எனக்கு அவர்களைப் பார்த்தால் அடையாளம் தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரரை எனக்குத் தெரியும். செந்தில்கவுண்டர் தோட்டத்திற்கும் தாடகை நாச்சியம்மன் கோவிலுக்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும். வள்ளியம்மாள் தாடகை நாச்சியம்மன் கோவில் வீதியில்தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரிதான். வள்ளியம்மாள் அவர் வீட்டில்தான் இருந்தார். எனது முதலாளிக்கு கிணற்றில் விழுந்துவிட்டார்கள் என தகவல் கூறினேன். பின்னர் எனது முதலாளி தீ அணைப்பு படைக்கு தகவல் கூறினார். வள்ளியம்மாள் இரவு 1 மணியளவில் தகவல் கூறினார். நான் வள்ளியம்மாள் போட்ட சத்தத்தைக் கேட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான்.

நான் சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்ட 5 நிமிடத்திற்குள்ளாக சென்றுவிட்டேன். கிணற்றில் விழுந்தவர்களை மீட்க விடியற்காலை நேரமாகிவிட்டது. அப்போது சுமார் 5 மணியிருக்கும். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல, போலிசார் சம்பவ இடம் வந்து கிணற்றைக் காட்டச் சொல்லி கூறினார்கள் , நான் கிணற்றை அடையாளம் காட்டினேன். மேற்படி சம்பவத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வாய்ப்பு வழங்கியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/- Thiru. E. Pragasam, BA,BL

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சரவணக்குமார் |
| Father's Name | – | காளிமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 16th April 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குஞ்சிபாளையத்தில் செந்தில் கவுண்டர் தோட்டத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அசா.3 ஐ எனக்குத் தெரியும். கடந்த 19.08.2023 ம் தேதி நான் துாங்கிக்கொண்டிருந்தேன். அப்போது இரவு 1 மணியிருக்கும். நான் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். கூட்டமாக பொதுமக்கள் வந்துகொண்டிருந்தனர். திருடன், திருடன் செயினை பறித்துக்கொண்டு வந்துவிட்டான் என சத்தம் போட்டார்கள். அப்போது வள்ளியம்மாள் என்பவரும் கழுத்தில் கிடந்த கயிறை பறிப்பதாக சத்தம் போட்டதை கேட்டு நான் சென்று பார்த்தேன்.

திருடிய நபர்கள் இருவரும் அங்கிருந்த கிணற்றிற்குள் விழுந்துவிட்டனர். ஒரு நபர் கிணற்றில் இருந்து மேலே வந்தார். மற்றொரு நபர் கிணற்றிற்குள் இருந்து மேலே வரமுடியாமல் இருந்தார். கிணற்றில் இருந்து மேலே வந்த நபரை பொதுமக்கள் பிடித்துக்கொண்டனர். பின்னர் தீ அணைப்பு படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மற்றொரு நபரை தீ அணைப்பு படை வீரர்கள் மீட்டனர். பொது மக்கள் மேற்படி நபர்கள் இருவரையும் காவல்நிலையத்தில் புகார் அளிக்க அழைத்துக்கொண்டு சென்றுவிட்டனர். ஆஜர் எதிரிகள்தான் மேற்படி நபர்கள் ஆவார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். அச்சமயத்தில் இருட்டான சமயம் என்பதால் எதிரிகளைப் பார்த்தால் அடையாளம் தெரியாது என்றால் சரியல்ல, நாங்கள் டார்ச் லைட் அடித்துப்பார்த்தோம். சம்பவ கிணற்றிற்கு எத்தனை மணி நேரத்தில் சென்றேன் என்றால் நான் அங்குதான் இருந்தேன், உடனடியாகச் சென்றுவிட்டேன். நான் எதிரிகளைப் சரியாகப் பார்க்கவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**1 ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பு வழங்கியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi.